வாரியத்தினர் 150 அடிக்குக் கீழேயே தண்ணீர் எடுத்த காரணத்தினால் தான் ஆட்சேபணை ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது, நிலத்தடி ஆய்வுக் குழுவில் இயங்கும் இயந்திரங்களில் சில 2,000 விருந்து 3,000 அடி வரை தண்ணீரை எடுக்கும் என்று தகவல் இருப்பதால், அவைகளைப் பயன்படுத்தி,, இத்திட்டத்திற்குத் தண்ணீர் எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கென உள்ள வல்லுநர்களை வைத்து அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய முறைகளின் அடிப்படையில் செயல் படுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு பிரச்சினையிலுமே நாட்டு மக்களுக்கு ஒரு கருத்து இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேறொரு கருத்து இருக்கலாம். அமைச்சராக இருக்கும் எனக்கு ஒரு தனிக் கருத்து இருக்கலாம். ஆனால் நாம் யாருமே அத்துறையில் வல்லுநர்களாக இல்லாத காரணத்தால், அதற்கெனவே உள்ள வல்லுநர்கள் என்னென்ன பரிந்துரை செய்கிறார்களோ, அதன்படிதான் செயல்பட முடியும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்போது எத்தனை கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இனி எத்தனை செயல்படுத்தப் படலாமென செய்திக் குறிப்பு உள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுப்படையான கேள்வி. அடுத்து வினா எண் 33.

Memorandum from the Madras Beedi Workers Union.

*Q. No. 33—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Labour be pleased to State :

(a) Whether the Government have received any memorandum from the Madras Beedi Workers Union, dated 2nd March 1981;

(b) If so, the action taken by the Government?

1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) சென்னை பீடித் தொழிலாளர் யூனியன்களின் கோரிக்கைகளும், அவைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரமும் கீழ்வருமாறு :—

கோரிக்கை.	எடுக்கப்பட்ட நடவடிக்கை.
(1)	(2)
1. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ஆம் நாளன்று சென்னையில் தமிழ் நாடு பீடித் தொழிலாளர் சம்மேளனத்தால் (சி. ஐ. டி. யு.) நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இந்தச் சம்மேளனத்தின் கோரிக்கைகளை தொழிலாளர் நல ஆணையர் ஆய்வு செய்து தக்க பதிலொன்றை சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் பீடித் தொழிற் சங்கங்களுக்கு அனுப்பியுள்ளார்.
2. சென்னை - செங்கல்பட்டு பீடித் தொழிலாளர் யூனியன்களுக்கும் பீடித் தொழிலதிபர்களுக்கும் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8 ஆம் நாள் அன்று கூலி விகிதங்கள் குறித்து ஏற்பட்ட ஒப்பந்தத்தை பீடித் தொழிலதிபர்கள் மீறிவிட்டனர்.	சென்னை முதல்சரகம் துணைத் தொழிலாளர் ஆணையரை இது குறித்து அணுகுமாறு சென்னை பீடித் தொழிலாளர் யூனியன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.
3. சென்னை - செங்கல்பட்டு பீடித் தொழிலாளர்களுக்கு வேலூரில் இருப்பது போன்ற மருத்துவ வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.	பெங்களூரில் உள்ள மத்திய அரசின் பீடித் தொழிலாளர் நல ஆணையரை இது குறித்து அணுகுமாறு மேற்கண்ட யூனியன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.
4 குடிசை மாற்று வாரியத்தால் கட்டப் படுகிற ஒரு சில வீடுகளை பீடித் தொழிலாளருக்கு ஒதுக்க வேண்டும்.	குடிசை மாற்று வாரியத் தலைவரை இது குறித்து அணுகுமாறு மேற்கண்ட யூனியன் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[1981 ஆகஸ்ட் 24

[முற்பகல் 9-50]

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகளில் பிரதானமானதொன்று அரசாங்கத்தின் சமீபத்திய ''ஃபால் பாக் வேஜஸ்'' ஜீ. ஓ. சம்பந்தப்பட்டது. குறைந்தபட்சம் பீடித் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 500 பீடி சுற்றுவதற்கான இலை, புகையிலையாவது கொடுக்கவேண்டும் என்றும் அப்படிக் கொடுக்கத் தவறினால் ஆயிரம் பீடி சுற்றிவதில் உள்ள கூலியில் பாதியாவது அவர்களுக்கு அன்று 'ஃபால்பாக் வேஜஸ்' ஆக கொடுக்கவேண்டும் என்பது ஜீ. ஓ. அது சம்பந்தமாக தொழிலாளர்களுக்கு—அமென்ட்மென்ட் இருந்தாலும் கூட—அது கூட கிடைக்காத அளவிற்கு ஒரு ஷரத்து அந்த ஜீ. ஓ. வில் இருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். புயல் அல்லது நெருப்பு, அல்லது இயந்திரக் கோளாறு அல்லது தீ அல்லது நோய் காரணமாக அல்லது மழை காரணமாக இந்தக் குறைந்தபட்சக் கூலி கொடுக்கவேண்டியதில்லை என்ற ஒரு ஷரத்து இருக்கிறதே, அதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆக, இப்படி நஷ்டயீடு கிடைக்காத அளவிற்கு இந்த ஷரத்து இருப்பதன் காரணத்தால் அதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்து அதை 'ட்ராப்' செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்ததா? முடிவு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தக் கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமநாத் அவர்கள் சொன்னது வரவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் சொன்ன பிரச்னை பற்றி மறுபரிசீலனை செய்யத் தயாராயிருக்கிறேன். இந்தக் கேள்விக்கும் அவர்கள் சொன்னதற்கும் தொடர்பில்லை.

திரு. ரா. உமாநாத்: அந்த முதல் பாராவில், தொழிலாளர்களின் கோரிக்கைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன என்று போடப்பட்டிருக்கிறது. அதில் இந்தக் கோரிக்கையும் வருகிறது. அதை மறுபரிசீலனை செய்யத் தயாராயிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். மிக்க நன்றி. அடுத்த கேள்வி, 1966 ஆம் ஆண்டு சட்டத்தை அமல்படுத்துவதில் தற்போதைய அதிகாரிகள், அந்த அமைப்பு போதாது என்பதால் அது முறைப்படி அமுலாகவில்லை என்ற கோரிக்கையும் அதில் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 1966 ஆம் ஆண்டு சட்டத்தை இம்ப்ளிமென்ட் செய்ய தனி மெஷினிரி ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கத்தின் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பொதுவாகவே விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சக் கூலி, மற்றவகையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச கூலி மல்படுத்துவது பற்றி இதில் இருக்கின்றன என்றும் அதை

1981 ஆகஸ்ட் 24]

அமல்படுத்துவதில் தொழில் அதிபர்கள் சரியாகச் செயல்படுவதில்லை என்றும் தகவல் வந்திருக்கிறது. எனவே இதை இன்னும் தீவிரமாகச் செயல்படுத்துவது பற்றி அந்த இயந்தரத்தை எப்படி மாற்றலாம், அதிகாரிகளை இன்னும் எப்படி அதிமாக்கச செய்யலாம் என்பதுபற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: 'பால்பாக் வேஜஸ்' விதிகள் பற்றி, அதைத் திருத்துவது பற்றி அரசின் ஆலோசனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 'பால்பாக் வேஜஸ்' படி 500 பீடி என்பது போதுமானதல்ல. அதை ஆயிரம் பீடியாக நிச்சயிக்க வேண்டுமென்று சொல்லி தொழிற்சங்கங்களிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா? அதுபற்றி அரசு ஆலோசித்துருக்கிறதா? என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: 'பால்பாக் வேஜஸ்' பெறவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு வந்து அரசாங்கமாக நிர்ணயித்ததுதான், இந்த 'பால்பாக் வேஜஸ்'. இப்போது தொழிற்சங்கங்களிடமிருந்து சில முறையீடுகள் வருகின்றன. ஒரு ஜனநாயக ஆட்சி என்பதால் அவற்றையும் இந்த அரசு பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கும்.

திரு. இரா. கருப்பையா: இந்த 'பால்பாக் வேஜஸ்' எந்தத் தேதியிலிருந்து இந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் உறுதியாகக் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்தத் தேதி இப்போது எனக்கு ஞாபகம் இல்லை.

மதுரை மாவட்டத்தில் வைகை ஆற்றின் இருபுறமும் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம்.

*வினா எண் 34—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் வைகை கால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அழிந்த நிலையிலுள்ள கிராமப்பகுதிகளின் ஓரங்களில் ஆற்றின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் நிலக்கோட்டை தொகுதி அக்கரைப்பட்டி, நடக்கோட்டை, குல்லிச்செட்டிபட்டி, பறையட்பட்டி ஆகிய கிராமங்களின் அருகில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அமுல் நடத்தப்படுமா ?